DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT & SESSIONS COURT,THENI.
Case No:S.C.No.119/2025
Prosecution Witness P.W.11

| | |
|---|---|
| Name : **திரு.முத்துநாராயணன்** | Caste: |
| Father's Name :**திரு.** | Calling : |
| Village: | Religion : |
| Taluk : | Age: |

எதிரிகள் ஆஜர்
**நாள்: 27.01.2026.**
(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது நீலகிரி மாவட்டம், கூடலூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 14.02. 2025 ஆம் தேதியன்று தேனி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் கண்காணிப்பாளராக பணிபுரிந்த பொழுது பழனிசெட்டிபட்டி காவல் நிலைய ஆய்வாளர் அவர்களது வேண்டுகோள் கடிதத்தில் திரு. பிரவீன் குமார், த/ பெ. மாயகிருஷ்ணன் வழக்கின் குற்ற எண் 454/2024 வழக்கு தொடர்புடைய அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட மூன்று இருசக்கர வாகனங்களுக்கு படிவம் 24 வழங்குமாறு கேட்டுக் கொண்டார்கள். அதன் அடிப்படையில் அலுவலக கணினியில் சரி பார்த்து அந்த மூன்று வாகனங்கள் தொடர்பான படிவம் 24 என்னால் சான்றிதழ் கொடுத்து வழங்கப்பட்டது. இது தொடர்பாக காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார். அந்த படிவம் 24 அ.சா.ஆ.4, 5 , 6. நான் வண்டியை பார்வையிடவில்லை. கணினியில் உள்ள விபரங்களை மட்டும் பார்த்து சான்றிதழ் வழங்கினேன். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்

**<u>எதிரிகள் 1, 2, 6, 7 தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. வண்டி பற்றிய விவரங்களை போலீசார் எழுதிக் கொண்டு வந்து எங்களிடம் கொடுத்து அதன் அடிப்படையில் நான் படிவம் 24 சரிபார்த்து வழங்கினேன். அந்த வழக்கு என்ன விவரம் என்று போலீசார் என்னிடம் சொல்லவில்லை. தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வரச் சொன்னதன் பேரில் நான் வந்துள்ளேன். போலிசாருக்கு ஆதரவாக நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>3-ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. அந்த படிவத்தில் என்ன வகையான வண்டி உரிமையாளர் யார் என்ற விபரங்கள் இருக்கும். படிவத்தை நான் கம்ப்யூட்டரில் இருந்து பிரிண்ட் அவுட் எடுத்து சான்றிதழ் போட்டு வழங்கினேன். அந்த வண்டி யார் பெயரில் உள்ளது என்ற விவரம் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை.

**<u>மற்ற எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

**(மேற்கண்ட குறுக்கு விசாரணையை தனது குறுக்கு விசாரணையாக ஏற்றுக்கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது)**

**<u>மறுவிசாரணை – இல்லை</u>**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2026.01.27 19:35:41 +0530

முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி,
தேனி.